அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 04 /2017
தேதி : 12.1.2017

**தமிழர்களின் பெருமைகளை மறக்கடிப்பதற்கும், மறைப்பதற்கும் யாருக்கும் உரிமை கிடையாது.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் கண்டனம்.**

ஜல்லிக்கட்டு விளையாட்டு நடத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை இருந்த நிலையில் இன்று வரை ஏமாற்றம். இந்த நிலைமை நீடித்தால் தமிழர்களின் அடையாளமான ஜல்லிக்கட்டு போட்டியை தொலைத்துவிட்டு நிற்கவேண்டியதுதான். பல்லாயிரக்கணக்கான பழமை வாய்ந்த தமிழர்களின் பெருமைகளை மறக்கடிப்பதற்கும், மறைப்பதற்கும் யாருக்கும் உரிமை கிடையாது.

சென்னையில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும் மாணவர்களும் கூடி தமிழர்களின் உரிமையை நிலைநாட்ட ஜல்லிக்கட்டு நடத்துவதற்காக போராடியதை மனதார பாராட்டுகிறேன். இளைஞர்களின் சக்தி ஒன்று சேர்ந்தால் எதையும் சாதிக்கலாம் என்பதை உணர்த்தியுள்ளார்கள். இந்த உணர்வு, ஊக்கம் அனைத்து தமிழ் மக்களையும் அடைய வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். தமிழர்கள் ஒன்று கூடி ஒருமித்த கருத்துடன் போராடினால், தமிழனுக்கு மிஞ்சிய வீரன் தரணியில் எவனும் இல்லை என்பதை உணர வைக்கலாம்.

இந்த ஆண்டு பொங்கலுக்கு அனைத்து தமிழர்களின் ஒருமித்த கோரிக்கையான ஜல்லிக்கட்டு விளையாட்டை நடத்த மத்திய அரசு ஏதேனும் வழியில் அனுமதி தரவேண்டும். பொங்கல் தினத்திற்கு முன் நிலைமை மாறாவிடில், தடையை உடைப்போம், உணர்வை மதிப்போம், தமிழனின் குரலை உலகம் அறிய செய்வோம்.

அடுத்த ஆண்டு கிரிக்கெட், கால்பந்து போன்ற போட்டிகள் போன்று விதிமுறைகளை சிறப்பான முறையில் வடிவமைத்து ஜல்லிக்கட்டு விளையாட்டையும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் தமிழகம் முழுவதும் நடத்தி இவ்வீர விளையாட்டின் புகழை உலகமறிய செய்து தமிழனின் பெருமை காப்போம்.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்